# அருள்ஜோதி

சுத்த சன்மார்க்கத் தமிழ் திங்களிதழ்

தனிஇதழ் ரூ.10/– ஆண்டு சந்தா ரூ.110/–

அருள்: 27

சோபகிருது ஆண்டு/ பங்குனி–சித்திரை / ஏப்ரல் –2024

மாத பூசத்திருநாள்: 16.04.2024 அடுத்த மாதம் பூசம்: 13.05.2024

ஜோதி: 04



தெய்வத்திரு.

**சதீஷ்ராஜ் அடிகளார்,**

நிறுவனர்

தயவுத்திருமதி.

**தனலட்சுமி அம்மையார்,**

ஆசிரியர், வெளியிடுபவர்

மற்றும் உரிமையாளர்

பதிவு அலுவலகம்:

**திருஅருட்பிரகாச வள்ளலார் அலுவலகம்,**

புதிய எண் 33, பழைய எண். 17, கென்னடி சதுக்கம்,

முதன்மைச்சாலை, சென்னை– 600011.

தொடர்புக்கு: 044–25570770 9003034056


## பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள் | 4 |
| வடலூர் அருட்பயணம் | 7 |
| அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை | 8 |
| உடற்பயிற்சி | 10 |
| பரிசு போட்டி | 12 |
| அருள்ஜோதி அன்ன ஆலய சேவாதாரிகள் | 16 |
| நம்மை நாமே திருத்திக் கொள்வது | 20 |
| பாவ பதிவுகளை அடியோடு ஒழித்தல் வேதாத்திரி மகரிஷி | 23 |
| இறைவன் நமக்கு பாவம் செய்யும் வாய்ப்பையும் கொடுப்பது ஏன் ? | 24 |
| மனத்தால் நினைத்ததை எல்லாம் பெற வள்ளலார் பயிற்சி | 27 |
| திருமணத் தகவல் | 31 |
| ஒழிவில் ஒடுக்கம் | 32 |

# வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள்

(மூன்றாவது தத்துவம்)

## தானே தான் நான் ஆனான்

உலகம் தோன்றியதிலிருந்து மனிதன் தன் ஆறாவது அறிவினால் தனக்கும் மேம்பட்ட ஒரு சக்தி இருக்கிறது என்று உணர்ந்து, அதனை இறைவன், கடவுள் என்று வணங்கி, அதனினும் உயர்ந்து ஒரு மனிதன் இறைவனாகவே ஆகலாம் என்று உணர்ந்து வாழ்ந்து காட்டிய இந்த நெடும் பயணத்தில் தான் சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் தோன்றின. தோன்றிய இத்தனையும் ஒரு மனிதன் இறைவனாக ஆவதே அவ்வவற்றின் குறிக் கோளாகப் பறைசாற்றின சாற்றிக் கொண்டு இன்றுவரை உள்ளன. இனியும் அப்படியே இருக்கப் போகின்றன.

ஆனால் சன்மார்க்கத்தில் ஆண்டவரே ஒரு மனிதனாக ஆகலாம் என்ற மிகப் பெரிய புரட்சிக் கருத்தை முன் வைக்கின்றார் வள்ளலார். அப்படி வைத்தவர், அருட்பெருஞ் ஜோதியாரே நானாக ஆகியுள்ளார் என்று மனிதன் ஒருவன் ஆண்டவன் ஆனதில் தானே முதல் மனிதன் என்றும் குறிப்பிடுகிறார். இது என்னே அதிசயம்! அருட்பெருஞ்சோதியே வள்ளலார் ஆனது!! பாடலைப் பார்ப்போம்.

**தானே அருளானான் தானே பொருளானான்**
**தானேஎல் லாம்வல்ல தானானான் தானே தான்**
**நானானான் என்னுடைய நாயகனா னான் ஞான**
**வானானான் அம்பலத்தெம் மான் 4700**

இதில் "தானே தான் நான் ஆனான்" என்ற சொற்களை ஊன்றிக் கவனிக்கவும்.



## அருட்பாப் பாடல்களைப் பாடுமாறு ஆண்டவர் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டது

எந்த ஒரு ஞானியும் தன் மனம் உருக இறைவனைப் பாடி பரவி ஏத்தி மகிழ்ந்தனரே அன்றி, இறைவன் வந்து நீ என்னைப் பாடுக, உன் பாடலைக் கேட்காமல் என்னால் இருக்க முடியாது என ஆண்டவரே வந்து நயந்து, கெஞ்சிப் பாடுக என்று கேட்டுக் கொண்டதாக எங்கும், எவரையும் கூற முடியாது. இந்தப் பெரிய பேறும் அருட்பாவுக்கே, அதனைப் பாடிய இராமலிங்கருக்கே

கிடைத்தது.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் மனி தனுக்குள் இருக்க இசைந்தார் எனில் எனக்குள் இருக்கவே இசைந்ததோடு மட் டுமல்லாது என்றும் பிரியாது என்னுக் குள் இருந்தான். என்னை எப்பொழுதும் விரும்பி அகத்தும் புறத்தும் என்னைச் சுற்றிச் சுற்றித் திரிந்தான். அப்படி என்னோடு உள்ளும் புறமும் சுற்றிச் சுற்றித் திரிந்தும் இருந்த அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர், என்னைப் பார்த்து இராமலிங்கம் மாலைப்பொழுதும் வந்து விட்டது, காலையிலிருந்தே நீ அருட்பா பாடுவாய் பாடுவாய் என ஏங்கித் தவித் துக் கொண்டிருக்கிறேன். அதனைக் கேட்டு மகிழ, இப்பொழுதாவது பாடுக அப்பா என்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாராம் ஆண்டவர். பாடலைப் பார்ப்போம்.

**இசைந்தான் என்னுள் இருந்தான் எனையும்**
**நசைந்தான்என் பாட்டை நயந்தான் – அசைந்தாடும்**
**மாயை மனமடக்கி வைத்தான் அருளெனும் என்**
**தாயை மகிழ் அம்பலவன் தான் 4699**

இவ்வாறு ஒரு மனிதனது பாட்டுக்கு ஆண்டவர் கெஞ்சிக் கொஞ்சிப் பாடுமாறு கேட்டுக் கொண்டது யாருக்கு வாய்த் தது. இப்படிப்பட்ட பெரும் பேற்றை யார் பெற்றார் என்பதோடு எந்த நூல் பெற்றது. இதனை வள்ளலார் ஒருவரே பெற்றார். அவரால் பாடப்பெற்ற அருட் பாவே பெற்றது.

## என் மேல் நினக்கு இவ்வளவு மோகம் ஏன்? என்றது

முன் 70ம் தலைப்பில் இறைவன் தன்னை அகத்தும் புறத்தும் ஜோதி அருள் உருவாய் திரிந்து திரிந்து அருள்கின்றாயே என்று ஆண்டவரை வள்ளலார் கேட் டதைப் பார்த்தோம். இங்கே அதற்கும் மேம்பட்டு என் மேலே உமக்கு உள்ள



மோகம் தான் என்ன? என்கிறார்.

ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என ஒரு பழமொழி இந்நாட்டில் உண்டல்லவா? இதில் மோகம் என்பது சற்று இழிவான பொருள்பட உரைப்பது. அப்படிப்பட்ட வார்த்தையை உச்சரித்தே ஆண்டவரை நினக்கு "என்மேல் இருக் கின்ற மோகம் என்னே? என்று கேட்கிறார் ஒருவர் எனில், அவருக்கும் ஆண்டவருக் கும் உள்ள பிணைப்பு எப்படிப்பட்டதாக இருக்கும்? இப்படிப்பட்ட ஒரு பிணைப்பு எந்த ஞானிக்கும் எங்கும், எப்பொழுதும் இருந்ததே இல்லை. பாடலைப் பார்ப் போம்.

**எத்தனைநான் குற்றம் செயினும்**
**பொறுத்தனை என்னை நின்பால்**
**வைத்தனை உள்ளம் மகிழ்ந்தனை**
**நான்சொன்ன வார்த்தைகளிங்**
**கத்தனையும் சம்மதித் தருள்**
**செய்தனை அம்பலத்தே**
**முத்தனை யாய்நினக் கென்மேல்**
**இருக்கின்ற மோகமென்னே 4678**

என்ற இப்பாடலில் நான் சொன்ன வார்த்தைகள் இங்கு அத்தனையும் சம் மதித்து அருள் செய்தனை என்றது, அருட்பா முழுக்க முழுக்க ஆண்டவரே சம்மதித்து அருள் செய்துள்ளார் என்பது விளங்கும்.

# ஆண்டவர் நானாகி என்னுள் எவ்வெவ்விடங்களில் எப்படி விளங்கினார் என்பது

முன் 83ம் தலைப்பில் தானே தான் நான் ஆனான் என்பதில் ஆண்டவர் மனிதனாக வந்து நானாக ஆனான் என் பதைக் கண்டோம். இங்கே ஆண்டவர் மனிதனாக வந்து அவனது உடலுள் எங் கெங்கு தங்குவார் என வள்ளலார் கூறு கிறார். ஏனெனில் அவருள் மட்டுமே இறைவன் வந்து முதன் முதல் தங்கியி ருப்பது மட்டுமல்ல அவராகவே ஆகியும் விட்டான்.

அப்படி ஆண்டவர் தம்முள் வந்து நானாகவே ஆகிவிட்ட அனுபவத்தை நமக்கறிவிக்கும் பெருங் கருணையால் கூறுகிறார்.

இவ்வாறு எந்த ஒரு ஞானிக்குள் இறைவன் வந்து அவராகவே தான் ஆகி நிலைத்து நின்றான்? மேலும் உடலுள் அவன் எங்கெங்கு பூரணமாக நிறைந் திருப்பான் என எவராவது இப்படிப் பட்ட அனுபவத்தைக் கூறிடவு மில்லை. பாடலைப் பார்ப்போம்.

**களித்தென துடம்பில் புகுந்தனை எனது**
**கருத்திலே அமர்ந்தனை களித்தே**
**தெளித்த என் அறிவிலே விளங்கினை உயிரில்**
**சிறப்பினால் கலந்தனை உள்ளம்**
**தளிர்த்திடச் சாகா வரங்கொடுத் தென்றும்**
**தடைபடாச் சித்திகள் எல்லாம்**
**அளித்தனை எனக்கே நின்பெருங் கருணை**
**அடியன்மேல் வைத்தவா றென்னே 3848**

இறைவன் என்னுடைய உடம்பில் வந்து புகுந்து விட்டது அவனுக்கு மிகக் களிப் பாக மகிழ்வாக இருந்தது. அதனால் வந்து புகுந்தான். புகுந்தவன் முதலில் என் கருத் திலே வந்து அமர்ந்தான் எப்படி எனில் களிப்புடன் அமர்ந்தான். அடுத்து என் னுடைய தெளிவான அறிவிலே கலந்து



விளங்கினான். அடுத்து எனது உயிரில் சிறப்புடன் கலந்தனன். கலந்தவன் எனது உள்ளத்தைத் தளிர்த்திடச் செய்தான். செய்து எனக்குச் சாகா வரத்தைக் கொடுத்து நான் எங்குச் செல்லினும் என்னை எதுவும், எப்படியும் தடுத்து நிறுத்த முடியாதபடி தடைபடாத சித்தி கள் அனைத்தையும் அளித்தான். இவ்வா றான மிகு பெருங் கருணையை என்மேல் ஏன் வைத்தான்? அதற்கு நான் செய்தது தான் என்னே என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறார்.

இவ்வாறு தம் உடம்பில் புகுந்து எங்கெங்கு எல்லாம் எப்படி எப்படி இருந்தான் என்பது உலகுக்கே ஒரு புதிய செய்தியாகும்.




# வடலூர் அருட்பயணம்

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி!

ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்றும் அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்

1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம், 4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6. மேட்டுக்குப்பம் சித்திவளாகம்.

இந்தப் புனித பயணத்தில் கலந்துகொள்பவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவுக்கட்டணம் ரூ.900 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் இருந்து காலை 6.30 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புக்கு: 9003034056**

**மாதப்பூச நாள்: 16-04-2024**

**குறிப்பு: அடுத்த பயணம்: 13-05-2024**

# அருட்பெருஞ்ஜோதி

## அகவல் உரை

**தீஇடை மூவியல் செறிவித்து அதில்பல**
**ஆய்வகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி 442**

தீயினிடம் வெம்மை, வலிமை, கலத்தல் ஆகிய மூன்று சக்திகளும்; ஆக்கல், காத்தல், அழித்தல் செயல்களும்; தோற்றம், உணர்வு, ஒலி ஆகிய மூன்று தன்மைகளும் மற்றும் அதில்பல இயல்புகளையும் நுட்பமாக அமையும்படி படைத்தருளியது அருட்பெருஞ்ஜோதி.

**தீஇடை நடுநிலை திகழ்நடு நடுநிலை**
**ஆய்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 444**

தீ சுடர்விட்டு எரியும்போது வெளியே பொன்னிறமாகவும், உள்ளே வெண் பொன் நிறமாகவும், நடுவில் நீல நிற ஒளியாகவும் தோன்றும்; அதன் நடுவில் இறை ஒளி, நடு நிலையாகச் ஜோதியுள் ஜோதியாக உருக்கொண்டு அமையப் படைத்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.

**தீஇடைப் பெருந்திறல் சித்திகள் பலபல**
**ஆய்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 446**

தீயினால் பொருள்களை மாற்றம் செய்து உணவு, இருப்பிட வசதிகள் அமையவும், மின் சக்தி, அணுசக்தி போன்ற பேராற்றல்களை உருவாக்கிப் பயன்படுத்தும் காரியச் செயல்கள் பலவற்றினால், உயிர்கள் பயனடையச் செய்விப்பது அருட்பெருஞ்ஜோதி.

**தீஇடைச் சித்துகள் செப்புறும் அனைத்தும்**
**ஆய்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 448**

தீயினால் செய்யப்படும் அறிவியல் விந்தைகள், எண்வகைச் சித்துகள் மற்றும் பல அற்புதச் செயல்கள் எனக் கூறப்படுவன யாவும் நன்கு செயல்பட அமையும்படி அருள்புரிவது அருட்பெருஞ் ஜோதி.

**தீஇடைச் சத்திகள் செறிதரு சத்தர்கள்**
**ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி 450**

தீயினால் சுடும், அடும் (சமைக்கும்), ஒளிரும், இருள்நீக்கும், விரிக்கும், சுருக்கும், அருவாக்குதல் போன்ற பல சக்திகளையும், அவை செயல்பட; பல பொருந்திய இயக்கங்களையும் தோன்றப் படைத்து ஆய்ந்து அமைத்துள்ளது அருட்பெருஞ்ஜோதி.

**தீஇடை உயிர்பல திகழ்உறு பொருள்பல**
**ஆய்வகை அமைத்த அருட்பெருஞ் ஜோதி 452**

தீயாகிய பூதத்தினால் பல உயிரினங்களும் வாழுமாறு செய்ததன்றி; உணவு, உடை, இடம், மருந்து மற்றும் பல பொருள் வகைகள் உருவாகவும்; அவை உயிர் வாழ்க்கைக்கு உறுதுணையாக அமையவும், ஆய்ந்துணரத்தக்க வகையில் படைத்தருளியது அருட்பெருஞ்ஜோதி.

**தீஇடை நிலைபல திகழ்செயல் பலபயன்**
**ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி 454**

தீயிடை உருவ, அருவ, நுண், பரு, மென்மை போன்ற பல நிலைகளும்; அந்நிலைகளுக்கு ஏற்றபடி செயல்கள் பலவும், அவற்றால் விளையும் பயன்களும் எனப் பல இயல்புகள் அமைத்து உதவுவது அருட்பெருஞ்ஜோதி.

**தீயினில் பக்குவம் சேர்குணம் இயல்குணம்**
**ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி 456**

*தீயினில் ஒடுங்கல், பெருகி விரிதல், எரிதல், எரித்தல், பயன்படுத்தல் ஆகிய பக்குவ நிலைகளும், அந்த நிலைகளுக்கேற்ற எந்தப் பொருளுக்கும் பக்குவத்தைச் சேர்க் கக்கூடிய குணம், செயல்களும்; அமையப் படைத்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.*

**தீஇடை உருக்குஇயல் சிறப்புஇயல் பொதுஇயல்**
**ஆய்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 458**

*தீயினுக்கு உருக்கும் தன்மை சிறப்பியல் பாகும்; பொருள்களை வெப்பமடையச் செய்வது பொதுப்பண்பாகும்; இவ்வியல் புகளை இனிது அமைத்தருள்வது அருட் பெருஞ்ஜோதி.*

**தீஇயல் பலபல செறித்துஅதில் பலவும்**
**ஆய்உறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 460**

*தீயினிடம் பயன்கொள்ளும் இயற்கை, செயற்கை தன்மைகள் பல அமைவித்து, ஆற்றல்கள், விளைவுகள், பயன்கள் ஆகிய பண்புகள் பல அமைத்தருள்வது அருட் பெருஞ்ஜோதி.*

## உலகில் உள்ள அனைத்து மனிதர்களுக்கும் ஒரு பொதுவான குணம் ஒன்று உண்டு.

நீங்கள் யாரிடமாவது சென்று நேற்று இரவு 12 மணி இருக்கும், தாமதமாக வீடு திரும்பி கொண்டிருந்தேன். அப்போது அந்த மூன்றாவது தெருவில் இருக்கும் ஒத்த வீட்டை தாண்டி வரும்போது வித்தியாசமாக ஏதோ ஒரு சத்தம் கேட்டது. வெள்ளையாய் ஒரு உருவம் ஓடியது போல இருந்தது எனக்கு ஒரு நிமிடம் மூச்சே நின்று விட்டது போல இருந்தது என சொல்லித்தான் பாருங்களேன், நீங்கள் சொல்லி முடிக்கும் முன் அதை ஆமோதிக்க ஒரு கூட்டம் அலை மோதும் . அட ஆமாப்பா ! எங்க ஊர்ல கூட இது மாதிரி ஒரு சம்பவம் நடந்திருக்கு என ஆளாளுக்கு பேய் பற்றிய தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள வருவார்கள்.

அதுவே அதற்கு மாறாக, நேற்றிரவு நான் வேலை முடித்து வழக்கமாக வருகிற வழியில் வந்து கொண்டிருந்தேன், அப்போது தெரு முனையில் உள்ள கோவிலை கடக்கும் போது திடீரென கடவுள் என் முன் தோன்றினார் என சொல்லி பாருங்கள். உங்களை எள்ளி நகையாடும் கூட்டம் ஒருபுறம் இருக்க, உங்களை பைத்தியம் என கிள்ளி விளையாடும் கூட்டம் மறுபுறம் இருக்க, மூன்றாவதாக ஒரு கூட்டம் வரும் இப்படி சொல்லிக் கொண்டு, ஆண்டாண்டு காலமாக என் அப்பன், பாட்டன், முப்பாட்டன் என கடவுளுக்கு சேவை செய்து வருகிறோம், எங்களுக்கு காட்சி தராத கடவுள் இந்த கிறுக்குப்பயலுக்கு காட்சி கொடுத்து விட்டாரா என்ன?

ஆம் பேயை கண்டதாக சொன்னால் நம்பும் நாம் கடவுளை கண்டதாக சொன்னால் நம்ப தயாராக இல்லை . நமக்கு மேலே ஒரு சக்தி, ஒரு ஆளுமை, ஒரு நம்பிக்கை இருக்கிறதென அதனை அனுபவித்தவர்களுக்கு மட்டுமே புரியும் . அதை வார்த்தைகளால் விவரிப்பது கடினம் .

இதனை இங்கு நான் கூற காரணம், அருள் ஜோதி அன்ன ஆலயத்தில் வேலைக்கு சேர்ந்த பிறகு எனக்கு ஏற்பட்ட சில வித்தியாசமான அனுபவங்களையும் என் சக ஊழியர்களுக்கு ஏற்பட்ட சிறப்பான அனுபவங்களையும், ஏற்பட்ட மாற்றங்களையும் இத்தொடரில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

# உடற்பயிற்சி

**ம**னிதன் தோன்றிய காலத்திலிருந்து தனது உணவு, உடை, சுற்றுப்புறம் இவற்றை உணர்ந்து சீரமைத்துக்கொண்டு வந்துள்ளான். அதே நேரத்தில் தனது உடல்நலத்துக்கான சில. பயிற்சிகளையும் செய்துகொண்டு வந்துள்ளான். எல்லா நாடுகளின் மக்களுமே உடற்பயிற்சியினைப் பல்வேறு முறைகளில் செய்து வருகின்றனர். இவற்றில் பல குறிப்பிட்ட சில அவயவங்களையோ, தசைகளையோ மட்டுமே சீரமைக்கின்றன. நமது நாட்டிலே இந்த உடற்பயிற்சியை ஒரு யோகமாகவே–யோகாசனம் என்கிற முறையில் பலவித ஆசனங்களை–நமது முன்னோர்கள் நமக்கு அளித்துச் சென்றிருக்கிறார்கள். உலக சமுதாய சேவா சங்கத்தின் அடிப்படைக் கொள்கையே உளப்பயிற்சிக்கு முன் உடற்பயிற்சி தேவை என்பதாகும். உடல் ஆரோக்கியம் செம்மையாக இருந்தால் தானே மனமும் வளமுற இயங்கும்?

## முறை

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு நமது அருள்தந்தை அவர்களால் நமக்கு அளிக்கப்பட்ட எளிய முறை உடற்பயிற்சிகள், விஞ்ஞானிகளும், பாராட்டும் வகையில் அமைந்துள்ளன.

மகரிஷி நூற்றாண்டில் வாழும் நாம் அவருடைய எளிய முறை உடற்பயிற்சியை நன்கு பயின்று தொடர்ந்து செய்து

வந்தால், நமது ஆன்மிகப் பயணமாகிய நல்வாழ்க்கை சீராக இருக்கும் என்பது திண்ணம்.

### மகரிஷி கூறுவதாவது :

பல ஆண்டுகள் நான் சிந்தித்து வந்தேன். பலவிதமான ஆசனங்களையும் உடற்பயிற்சிகளையும் ஆராய்ந்து வந்தேன். நான்கூறும் பயிற்சிகளை நானே செய்துபார்த்து அதன் விளைவுகளை எனது உடல்மூலம் தெரிந்து கொண்டேன். இந்திய மருத்துவத் துறையில் எனக்கு இருந்த அறிவு இந்த ஆய்வுக்கு உதவியது. நான் கூறும் பயிற்சிகளை ஒழுங்காகச் செய்துவருவதால்,

1. உடலுக்குள் பிராணவாயு பரவி நாளமில்லாச் (Endocrine) சுரப்பிகளின் இயக்கத்தை ஒழுங்குபடுத்துகிறது.
2. இரத்தத்தைச் சுத்தப்படுத்தி அதன் ஓட்டத்தை ஒழுங்குபடுத்துகிறது.
3. நோய்வராதபடி தடுப்புச் சக்தியை அதிகப் படுத்துகிறது.
4. ஆரோக்கியமான உடம்பும், நீடித்த ஆயுளும் உண்டாகின்றன.
5. ஆடவருக்கும், பெண்டிருக்கும், குழந்தைகளுக்கும், பல்வேறு வாழ்க்கை நிலையில் இருப்பவர்களுக்கும் ஏற்றதாக உள்ளது.
6. பல்வேறு காலநிலைகளுக்கு ஏற்றதாக உள்ளது.
7. உடலை வருத்தாமலும், துன்புறுத்தாமலும் செய்யலாம்.
8. மனித உடலில் உள்ள விலங்கினப் பதிவுகளை நீக்கு வதற்கு இந்த உடற்பயிற்சி பெரிதும் உதவுகிறது.
9. குறைந்த காலத்தில் (அரைமணி நேரத்தில்) முடிக்கக் கூடியவாறு, ஒன்பது பயிற்சிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இதன் மூலம் ஆன்மீகத் தேடலில் வெற்றிபெற்று நாம் இந்த மண்ணுலகுக்கு எதன் பொருட்டு வந்தோமோ, அதைத் தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம். நான் கூறும் பயிற்சிகளை ஒழுங்காகச் செய்பவர்கள் பல சிறந்த நன்மைகளை அடைவார்கள். எளியமுறைக் குண்டலினி யோகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் நான் கூறும் பயிற்சிகள் செய்து பழகுவதன்மூலம் பெரும்அளவில் நன்மை அடையலாம். நான் கூறும் பயிற்சிகள் அதற்கு அதிக அளவு உதவியாக இருக்கும்.

# அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு அன்னதர்மம் வழங்கும் அன்பு உள்ளங்களின் ஆனந்த அனுபவங்கள்

எனது பெயர் சந்திரவதனி நான் அண்ணா நகரில் வசித்து வருகிறேன். நான் கடந்த 10 வருடமாக எனது தாயாருடன் இணைந்து அருள் ஜோதி அன்ன ஆலயத்திற்கு என்னால் இயன்ற பொருள் உதவியையும், அன்ன தர்மத் திற்காக காணிக்கையும் அளித்து வருகிறேன். இப்படி தொடர்ந்து செய்வதால், என் மனதில் கருணை எண்ணம் வளர்கிறது. மனிதர்களாகிய நாம் இவ்வுல கத்திற்கு பயனுள்ளதாக எதையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் எழ ஆரம்பித்ததில் இருந்து நான் நோயற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். எனக்கு தர்மம் செய்யக்கூடிய ஒரு நல்ல எண்ணத்தை யும், வாய்ப்பையும் இறைவன் கொடுத்திருக்கின்றான் என்றால் அது எனக்கு கிடைத்த பெரும் பாக்கியமாக நினைக்கின்றேன்.

---

அன்புடையீர் வணக்கம்

நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில், உலக சமாதானம் மற்றும் மக்கள் உடல் ஆரோக்கியம் பெற ஒவ்வொரு வியாழக்கிழமையும் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுகின்றது. இந்த பிரார்த்தனையில் கலந்து கொள்வதன் மூலம், உங்களுடைய எல்லா விதமான பிரச்சனைகளும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவருளாள் தீர்க்கப்படுகின்றன. அதனால் தாங்களும் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளோடு வாழ்வில் எல்லா வளங்களும், நலங்களும் பெற்று குறையின்றி வாழ வேண்டுமென்பதே இதன் முக்கிய நோக்கமாகும். அனைவரும் வருகை தந்து வள்ளல் பெருமானின் அருளை பெற வேண்டுகிறோம்.

**நேரம்: மாலை 4.00 மணி**
**அருள் ஜோதி அன்ன ஆலயம்**
**எண்: 33/17, கென்னடி சதுக்கம்,**
**பிரதான சாலை, திரு.வி.க நகர்,**
**பெரம்பூர், சென்னை–600011.**
**தொடர்புக்கு: 9003034056.**



# காயசித்தி மூலிகை ‘வல்லாரை’

## வள்ளலார் வைத்தியம்

வள்ளல் பெருமான் கூறக்கூடிய ஐந்து ஞான மூலிகைகளில் ஒரு முக்கியமான மூலிகை வல்லாரை. வல்லாரை மூளை சம்பந்தப்பட்ட நினைவாற்றலையும், உடல் உஷ்ணத்தையும் சரி செய்யும். உடலைத் தேற்றக் கூடிய ஒரு மூலிகை. உணர்ச்சிகளை கட்டுப்படுத்தும் ஒரு மூலிகையாக வள்ளல்பெருமான் குறிப்பிடுகின்றார். வல்லாரையை சமைத்து சாப்பிடும் முறை பார்க்கலாம்.

வல்லாரை அடை

தேவையானவை:– புழுங்கல் அரிசி– 2 கப், கடலைப்பருப்பு, துவரம்பருப்பு, பாசிப்பருப்பு, ஆய்ந்த வல்லாரைக் கீரை– தலா ஒரு கப், கருப்பு உளுந்து–அரைக்கப், காய்ந்த மிளகாய்–15, தேங்காய் துருவல்–ஒரு கப், உப்பு தேவையான அளவு, சிறிதளவு பெருங்காயம், எண்ணெய்–அரைக்கப்

செய்முறை:– அரிசி, பருப்புகளை ஊறவைக்கவும். இத்துடன் காய்ந்த மிளகாய், உப்பு பெருங்காயம் சேர்த்து கரகரப்பாக அரைக்கவும். இதில் கீரை, தேங்காய் துருவல் சேர்த்து ஒரு முறை சுற்றி எடுக்கவும். தோசை கல்லில் மாவை தடிமனாக ஊற்றி எண்ணெய் விட்டு இருபுறமும் வெந்ததும் எடுக்கவும்.



## பரிசு போட்டி

நம் அருள்ஜோதி சன்மார்க்க மாத இதழில் வெளியாகும் கட்டுரைகளில் இருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான பதில் அளிக்கும் ஒரு வாசகருக்கு அழகிய பரிசு காத்துள்ளது.

### இந்த மாதத்திற்கான கேள்வி

**ஒவ்வொரு நாளும் எப்படி வாழ வேண்டும் என்ற நித்திய கரும விதியை எத்தனை விதியாக பிரித்து கூறுகிறார் வள்ளல்பெருமான்?**

**விடைகள் அனுப்ப வேண்டிய கடைசி தேதி: ஏப்ரல்–15**

**விடைகள் அனுப்ப வேண்டிய வாட்அப் நம்பர் : 90030 34056**

# மனிதப் பிறவி பெற்றதன் பயனை அறிந்து அடைவோம்



மனிதர்கள் முதலிய உயிரினங்கள் தூய்மை அடைவதற்கும், துன்பத்தையும், புலம்பலையும் ஒழிப்பதற்கும், துயரங்களையும், மன கஷ்டங்களையும் அழிப்பதற்கும், அவ்வுயிர்கள் உண்மை நெறியை கடைபிடிப்பதற்கும், மிக முக்கிய வழியாக இருப்பது, சமரச சுத்த சன்மார்க்க சத்திய நெறியே உயர்ந்த ஆதாரமாக உள்ளது. எனவே தன்னளவில் ஒழுக்கமும், பிறர் அளவில் தயவும் கடைப்பிடித்து தான் யார் என்னும் அகவிசாரம் செய்து கொண்டு, எந்த சூழ்நிலையிலும் ஆணவம், மோகம், மயக்கம், புகழ், மாயை மற்றும் போகத்தில் சிக்கிடாது, (அதாவது) நெறி தவறிடாது, இறைவனிடத்தில் அன்பும், அடியவர்களிடத்திலே பக்தியும், உயிர்களிடத்திலே கருணையும் கொண்டு சன்மார்க்க நெறியில் தொடர்ந்து பயணித்தோமானால் இறைவனின் பேரின்பத்தை அடைந்திடலாம். இதுவே மனிதப் பிறவி எடுத்ததின் பயனாகும்.

# மனித வாழ்வின் மகிமையை அறிந்து கொள்வோம்



நாம் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய இந்த உடம்பு மற்றும் இந்த வினாடி கடவுள் நமக்கு கொடுத்த அகப்புற அதிர்ஷ்டங்கள் ஆகும். இதை மிக சரியாக சிறப்பாக பயன்படுத்தி, பிறவிப் பயனை அடைந்திடுவோம். அதாவது தனக்குள் இருக்கும் இறைவனை உணர்ந்து, இறைவன் அருளால் உலக உயிர்களுக்கு நன்மை செய்திடுவோம். ஏனெனில் பிறவி, இறப்பு மிகவும் துன்பம் நிறைந்ததாகும். அதாவது பிறப்பு, வாழ்வு, இறப்பு திரும்பவும் ஆன்மா பிறப்பு எடுக்கும் காலம் முதல் எல்லாம் துன்பமே. எனவே உடல் மற்றும் உள்ளம் அவத்தைகள் அனுபவிக்காத காலம் கடவுள் அருளை பெறுவதற்கான பொக்கிஷமான காலம் என உணர்ந்து சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளுவோம் உலக உயிர்களுக்கு நன்மை செய்ய....

அருட்பெருஞ்ஜோதி !
அருட்பெருஞ்ஜோதி !!

தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி !

# தவத்திரு. சதீஷ் அடிகளார்

எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளால் இவ்வுலகிற்கு வருவிக்கவுற்றவர் வள்ளல் பெருமானார். வள்ளல் பெருமானாரின் கொள்கைக்கும் கோட்பாடுகளும், அவரின் அருட்பா பாடல்களும் உலக உயிர்கள் பயனடைய வாழ்ந்து வழி காட்டிக் கொண்டு இருப்பவர். நமது சதிஷ்ராஜ் அடிகளார் ஐயா அவர்கள்.

அவரால் உருவாக்கப்பட்ட அருள்ஜோதி அன்ன ஆலய தொண்டு நிறுவனத்திலும் அருள்ஜோதி குருகுலப்பாடசாலை மற்றும் அருள்ஜோதி தொலைக்காட்சியிலும் பல அருளாளர்கள் இணைத்து அருள் செயல்பாடுகளை அனைவரையும் செய்ய வைத்து இன்பத்தை அனுபவத்திக் கொண்டு இருக்கின்றார்.

ஒரு மனிதனின் பெருவாழ்வு என்பது–அவர்கள் வாழும் பொழுது ஒவ்வொரு அசைவையும் இந்த பிரபஞ்சம் கவனித்துக் கொண்டே இருக்கின்றது. இதனை பதிவு செய்து கொண்ட பிரபஞ்ச சக்தி அதனை திரும்ப அளித்து அவரால் உருவாக்கப்பட்ட அனைத்து நற்செயல்களும் சிறப்பாக செயல்பட வழி வகுத்துக் கொண்டு இருக்கின்றது.

பசி தீர்ப்பது பரம புண்ணியம் என்று 1995இல் அருள்ஜோதி அன்ன ஆலயத்தை உருவாக்கினார்.

குவலயம் செழிக்க குருகுலம் என்று 2002 இல் குருகுல பாடசாலை அமைத்தார். நாளும் நலம பெற நல்லதைப்பார் என்று 2013இல் அருள்ஜோதி தொலைக்காட்சியும் அருள்ஜோதி youtube channel உருவாக்கினார்.

## அருள்ஜோதி அன்ன ஆலயத்தின் பசி தவிர்த்தலின் சேவை

| Year | Per Day Served | Year | Month | Days | Total |
|---|---|---|---|---|---|
| 1995 Jan | 40 | 0.08 | 1 | 30 | 1,200 |
| 1995 Feb-Dec | 100 | 0.92 | 11 | 330 | 33,000 |
| 1996-2000 | 1000 | 5 | 60 | 1800 | 18,00,000 |
| 2001-2021 Dec | 5000 | 21 | 252 | 7560 | 3,78,00000 |
| Jan 2022-2024 Mar | 7000 | 2.25 | 27 | 810 | 56,70,000 |
| | | | | Overall Total: | 4,53,04,200 |

| | | |
|---|---|---|
| **1995 முதல் 1மாதம் தினம் 40 பேர்** | 40x30 | =1200 |
| **1995 முதல் பிப்ரவரி முதல் தினம் 100 பேர்** | 100x330 | =33,000 |
| **1996 முதல் 2000 வரை தினம் 1000 பேர்** | 1000x1800 | =18,00,000 |
| **2001 முதல் 2021 வரை தினம் 5000 பேர்** | 5000x7560 | =3,78,00,000 |
| **2022 ஜனவரி முதல் மார்ச் 2024 வரை தினம் 7000 பேர்** | 7000x810 | =56,70,000 |

| | | |
|---|---|---|
| 1995ம் வருடம் ஜனவரி மாதம் | – | 1200 |
| 1995ம் வருடம் பிப்ரவரி முதல் டிசம்பர் வரை | – | 33,000 |
| 1996 முதல் 2000 வரை | – | 18,00,000 |
| 2001 ஜனவரி முதல் 2021 டிசம்பர் வரை | – | 3,78,00,000 |
| 2022 ஜனவரி முதல் 2024 மார்ச் வரை | – | 56,70,000 |
| பசி தீர்ப்பதில் பயனடைந்தவர்கள் | | 4,53,04,200 |

இன்று வரை சதிஷ்ராஜ் அடிகளார் ஐயா அவர்களின் உயர்ந்த எண்ணத்தினாலும் வள்ளல் பெருமானாரின் தனிப்பெருங்கருனையினாலும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பரிபூரண ஆசிர்வாதத்தினாலும் அருள்ஜோதி அன்ன ஆலயத்தின் சேவைக்கு உதவி புரிந்தவர்கள் உடம்பாலும், உயிராலும் அனைவரின் உணர்வினாலும் பயன் அடைந்தவர்களின் விவரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஏப்ரல் 10 நம் சதிஷ்ராஜ் அடிகளார் ஐயா அவர்களின் அருள்தினம் ஆகும். அவரால் விதைக்கப்பட்ட விதைகள் விருட்சமாக வளர்த்துக்கொண்டு சென்னையை அடுத்து மாவட்டங்கள், மாநிலங்கள, நாடு கடந்து, உலகு அனைத்திலும் சன்மார்க்கத் தொண்டு நிலைத்து இருக்க என்றும்



வாழ்ந்துக்கொண்டு இருக்கின்றார். நமது அருள்ஜோதி அன்ன ஆலய சதிஷ்ராஜ் அடிகளார் அவரை புரிந்துக்கொண்டவர்கள் சன்மார்க்கத்தை புரிந்துக்கொண்டவர்கள்.

நன்றி

**தயவுத்திருமதி– தனலட்சுமி அம்மா.**

# அருள்ஜோதி அன்ன ஆலய சேவாதாரிகள்



திரு.இரவிசந்திரன் ஐயா



திரு.முத்துராஜ் ஐயா



திரு.ஐயப்பன் ஐயா



திரு. வெங்கட்ராமன் ஐயா



திரு.ஜெகதீசன் ஐயா



திரு. ப.ஐயப்பன் ஐயா



திருமதி. சந்தானலட்சுமி அம்மா



செல்வி.ஜெயஸ்ரீ

**மேற்கண்ட படங்களில் உள்ளவர்கள் நமது அன்ன ஆலய சேவாதாரிகள், மற்றவர்கள் அன்ன ஆலயப் பெயரை உபயோகப்படுத்தினால் கீழ்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

# 90030 34056

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை



எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை–600011

தொலைபேசி: 9003034056, 9600024878

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com

## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மேன்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்.

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5–ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கீகாரம் பெற்ற (பதிவெண் 24/239–2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மிக கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



| அன்ன தர்மம் விவரம்: | |
|---|---|
| காலை உணவு | ரூ.2000/– |
| மதிய உணவு | ரூ.5000/– |
| மதிய சிறப்பு உணவு | |
| (வடை, பாயாசம் உட்பட) | ரூ.8000/– |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்

**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

அருளாளர் பதிவு படிவம்

பெயர்:

முகவரி: பதிவெண்: __________

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி



எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி அன்ன ஆலயம் முதலாம் ஆண்டு விழா

**38-C,ஹவுசிங் யூனிட், வள்ளலார் தெரு, அண்ணலக்ரஹாரம், கும்பகோணம்.**



நாள் : **07-04-2024** ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை **7.30** மணி

அன்புடையீர், வணக்கம்,

எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள் துணையோடும், வள்ளல் பெருமானின் கருணையோடும், கொட்டையூர் (தெய்வத்திரு) **ராமதாஸ் அண்ணா,** கோணக்கரை **ஸ்ரீ பத்மநாப சுவாமிகள்,** ஸ்ரீ அன்னதான சிவன் மற்றும் (தெய்வத்திரு) **சதீஷ் அடிகளார்** (அன்ன ஆலயம்) இவர்களுடைய அருளாசியுடன் கீழ்காணும் நிகழ்ச்சி நிரலின்படி விழா சிறப்புற நடைபெற உள்ளது. அவ்வமயம் ஆன்மநேய அன்பர்களும், சன்மார்க்கர்களும் தங்கள் குடும்பத்தாருடன் வருகை புரிந்து அருட்பெருஞ்ஜோதி இறைவனுடைய பெருங்கருணைக்கு பாத்திரமாகி வாழ்வில் பெருநிலை பெற்று பெரு வாழ்வு வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன்

தொடர்புக்கு
செல் : 94860 70013

**ச.தனலட்சுமி அம்மையார்** அருள்ஜோதி அன்னஆலயம், சென்னை
**சீ. கண்ணபிரான்** தஞ்சை மாவட்ட சன்மார்க்க தலைமைச் சங்க செயலாளர்

## நிகழ்ச்சி நிரல்

காலை 5-00 மணி : **அகவல் பாராயணம்**
தலைமை : **திரு அருட்பிரகாச வள்ளல் பெருமான்**
பங்கேற்போர் : சன்மார்க்க அன்பர்கள் மற்றும் ஆன்மநேய அடியார்கள்
தலைமை : மருத்துவர் **அருள்நாகலிங்கம்** மாநிலத் தலைவர்,

காலை 7-30 மணி : **கொடி கட்டும் நிகழ்ச்சி**
கொடி உயர்த்துபவர் : திரு **பெ.கேசவன்** மாநிலத் துணைத் தலைவர்,

காலை 8-00 மணி : **திருஅருட்பா இசை கச்சேரி**
அருள் இசை : அருட்பா இசை அரசி செல்வி **கௌசல்யா** அவர்கள் தஞ்சாவூர்

காலை 8-30 மணி : **விருந்தோம்பல் - காலை உணவு**

காலை 9-00 மணி : வாழ்த்துரை : **சன்மார்க்க அன்பர்கள்**

காலை 10-00 மணி : சொற்பொழிவு : திரு **S.M.செந்தில்குமார் VAO** காஞ்சிபுரம்
தலைப்பு : ஆடல் செய்தருளும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை அடைய வள்ளல் பெருமானார் கூறும் வழிகள்

காலை 11-00 மணி : சிறப்பு சொற்பொழிவு திரு **தாமல் கோ.சரவணன்**
தலைப்பு : வீடுகள்தோறும் விதிநெறி விளங்க வள்ளலார் கூறும் வழிகள்

பகல் 12-30 மணி : நன்றியுரை : தயவுத்திருமதி **ச.தனலட்சுமி அம்மாள்**
அருள்ஜோதி அன்ன ஆலயம், சென்னை

பகல் 1-00 மணி : பகல் உணவு

டவுன் பஸ் நெ.: 20, 21, 72 அண்ணலக்ரஹாரம், காளிமுத்து நகர் ஸ்டாப்







அருள்ஜோதி குருகுல பாடசாலையில் எல்.கே.ஜி முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் 07/03/2024 அன்று நடைபெற்றது. மாணவர்கள் அனைவரும் அவர்களின் திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தினார்கள்.





## ஆத்ம தரிசனம்

# நம்மை நாமே திருத்திக்கொள்வது

**சீடன்: நம்முடைய கர்மாவினால்தான் நமக்குத் தீமைகள் ஏற்படுகின்றனவா?**

**குரு :** உனக்கு ஒருவன் தீங்கு செய்கிறான் என்று வைத்துக்கொள். அவன் உனக்குத் தீங்கிழைப்பது தவறான செயல்தான். ஆனால், அதற்காக அவனைச் சபித்துவிடாதே. மாறாக நீ நிலை குலையாமல், அவனை வாழ்த்து. அவன் உன்னைத் திட்டும் போது அவனிடம், 'ஆண்டவன் உன்னுடன் இருக்கட்டும்' என்று கூறு. அப்படி நீ சொல்வது உனக்குப் பாதுகாவலாகும். 'கர்மா' அல்லது வினைப்பயன் என்பது செயலும் அதன் பிரதிபலனும் ஆகும். நீ இந்தக் கர்மச் சுழலில் இருந்து விடுபடுவது உன்னுடைய கைகளில்தான் உள்ளது. உன்னை ஒருவன் அறைகிறான் என்று வைத்துக்கொள்; அவனை நீ வாழ்த்துவதன் மூலம் அந்தத் தீவினைச் சுழலை உடைக்கிறாய். அது மட்டுமல்லாமல் உனக்குத் தீங்கிழைத்தவனுக்கும் உதவி செய்தவனாகிறாய்.

ஒருவனைச் சபிப்பதாலோ, உன்னுடைய முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொள்வதாலோ யாருக்கும் எந்த, நன்மையும் நேரப்போவதில்லை. நீ அவனை சபிப்பதால் அந்தச் சாபம் அவனுக்குப் பலிக்கும். ஏனென்றால், அவன் உனக்குத் தீங்கிழைத்தவன். இது செயலாகும். நீ அவனைச் சபித்தால் அதை அவன் அனுபவிக்க வேண்டியதாகிறது. அதுதான் பிரதிபலன் ஆகும். ஆனால், இப்பொழுது நீ உனக்குத் தீங்கிழைத்தவனைச் சபிப்பதில்லை என்று தீர்மானித்திருக்கிறாய். அவனைச் சபிப்பதற்கு மாறாக, கடவுளின் பெயரால் அவனை வாழ்த்தி, அவன் நன்மை பெறவேண்டும் என்று இறைஞ்சுகிறாய். இப்படிச் செய்வதன் மூலம் நீ அவனுக்கும் நன்மை செய்கிறாய்.

ஏசுவின் கருணை அளவற்றது. அதை வார்த்தைகளால் விளக்க முடியாது. அவரைப்பற்றி அறியாத கோடிக்கணக்கான மக்களுக்காக அவர் பிரார்த்தனை செய்திருக்கிறார்.

உன் அருகிலிருப்பவர்களிடம் தீய நோக்கங்கள் இருப்பதை நீ அறிந்தால், அவர்களுக்காக உடனே பிரார்த்தனை செய். நீ நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்தால், அவர்கள் உனக்குத் தீங்கிழைக்க உன்னை நெருங்க மாட்டார்கள்.

**சீடன் : எனக்கு நேரும் சில இன்னல்களுக்கு நீங்கள்தாம் காரணம் என்று சில சமயம் குறை கூறுவதுண்டு.**

**குரு:** நீ இதைப் புரிந்துகொள். உனக்கு உதவி செய்வதை நீ முதலில் அனுமதிக்க வேண்டும். உனக்கு நீந்தத் தெரியாமல், நீ தண்ணீரில் விழுந்து விட்டால், உன்னைக் காப்பாற்ற வந்தவன் உனக்கு உதவ, நீ முதலில் அனுமதிக்க வேண்டும். அவனுடன் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு செய்யாமல் நீ அவனையும் கீழே இழுப்பாயானால் அவன் உன்னை அறைந்து, உன் தலைமுடியைப் பிடித்து உன்னை மேலே எடுப்பான். தண்ணீருக்குள் இருக்கும் பொழுது அறைந்தால் வலியைத் தாங்க. முடியாதுதான். ஆனால், அப்படியும் நடப்பதுண்டு; என்ன செய்வது!

**சீடன்: நீங்கள் தீங்கு இழைத்தவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யவேண்டும் என்று சொன்னீர்கள். அவர்களிடமே பிரார்த்தனை செய்யலாமா?**

**குரு:** அதுவும் நல்ல வழிதான். ஆனால், ஒவ்வொன்றாகக் கற்றுக்கொள். படிக்கட்டு ஏறும் பொழுது ஒவ்வொரு

படியாய் ஏறுவதுதான் புத்திசாலித்தனம். வேகமாகத் தாவினால் உன் கால்களில் வேண்டுமானால் வலி ஏற்படாமல் இருக் கலாம். ஆனால், உன் சட்டைப்பையிலி ருக்கும் சில்லறை படிக்கட்டின் வழியே உருண்டு கீழே விழக்கூடும். அதைச் சேகரித்து எடுக்க நீ கீழே இறங்கி வர வேண்டியிருக்கும். அதனால் உன் நேரம் வீணாகும்.

மற்றவர்களிடம் பிரார்த்தனை செய்வது கடினமான விஷயமில்லை. அதில் நிறைய நன்மைகளும் உள்ளன. மற்றவர்களுக்கா கப் பிரார்த்தனை செய்யும் போது ஒரு சிறிய ஆபத்து உள்ளது. அவர்களுக்கா கப் பிரார்த்தனை செய்வதில் நீ கர்வம் கொள்ளக்கூடும்.

**சீடன்: பொதுவாக, மனிதர்கள் அவர் களுக்குத் தீங்கிழைத்தவர்களுக்கு மறுஅ டியோ, சாபமோ கொடுப்பார்கள். ஆனால், ஏசு எல்லாச் சந்தர்ப்பத்திலும் பிரார்த்தனை செய்தார். நானும் அவரைப் போலவே செயல்பட முடியுமா?**

**குரு:** இதை நீ சரியாகப் புரிந்துகொள். அவரைப் போலச் செயல்படமுடியாது. அன்பாய் இரு. பக்தியுடன் கூடிய அர்ப் பண உணர்வுடன் இரு. அப்பொழுது நீ ஏசுவைப் போல் நடிப்பவனாக அல் லாமல் நீயே ஏசு ஆகிறாய் என்பதைப் புரிந்துகொள்வாய். ஒருவன் கருணையாய் இருக்கும் பொழுது, தானே ஏசு ஆக முயல்கிறான். அல்லது அவரைப் பிரிதி பலிக்கிறான். ஏசு வேறு, நீ வேறு என்று நீ பிரித்துப் பார்க்கும்வரை உன் உள் ஏசுவைக் காணமுடியாது. நீயே அவராக வேண்டும். அது எப்படி நேரும் ? அள வற்ற கருணை, வீரம், அன்பு, ஆத்ம சக்தி, விருப்பத்துடன் சுமைகளைத் தாங்கும் உறுதியான உள்ளம் இவற்றையெல்லாம் வளர்த்துக்கொண்டு, ஏசு உன் உள் வசிக் கிறார் என்று நீ கண்டுகொண்டால் நீயே அவராகிவிடுகிறாய். இதுதான் இரகசி யம்.

**சீடன் : ஏசுவின் கருணையும் அன்பும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அப் படியிருக்க அவரும் பன்னிரண்டு சீடர் களைத்தானே தேர்ந்தெடுத்தார்?**

**குரு:** அவருடைய அன்பையும் கருணையையும் அறிந்தார்களா? எப்போது? இப்பொழுது இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகுகூட மனிதன் சரிவ ரப் புரிந்துகொள்ளவில்லையே. அவரைச் சிலுவையில் அறைந்து, அவர் முகத்தில் உமிழ்ந்து, அவரைக் கேலி செய்து அவரைப் பின்பற்றியவர்களைக் கொலை செய்தவர் களின் மொத்தச் சுமையையும் தாமே ஏற்றுக்கொண்டு ஒரு மகத்தான தியா கத்தைச் செய்தாரே, அந்தக் கருணையை மனிதன் புரிந்து கொண்டிருக்கிறானா? அவருடைய பன்னிரண்டு சீடர்களும் பண்டிதர்களோ, வேதாந்திகளோ, படித்த மேதைகளோ, பாதிரிகளோ அல்லவே. படிக்கவோ எழுதவோகூடத் தெரியாத எளிமையான மனிதர்களல்லவா? அந்தச் சாதாரண மனிதர்களை அசாதாரணமா னவர்களாக்கியது அவர்களுக்கு ஏசுவின் மேல் இருந்த அதீத நம்பிக்கைதான். அத னால்தான் அவர்களால் ஏசுவின் கருவி யாகச் செயல்பட முடிந்தது.

**சீடன் : கருணையைப்பற்றிச் சிறிது கூறுங்கள்.**

**குரு:** கருணைக்கு அளவில்லை. கருணை பொதுவானது. உன் கருணை, என் கருணை என்று அதை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. உயிர் வாழும் ஜீவன்களெல்லாமே கருணை நிரம்பியவை தாம். ஒருவனோ அல்லது ஒருத்தியோ கருணையற்று இருப்பதாக நாம் கூறமு டியாது. கொலை செய்பவனிடம்கூட கருணை உள்ளது. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக அதை அவன் உணர்ந்து கொள் வதில்லை. அதை அவன் உணர்ந்தால் கொலை செய்யமாட்டான். கருணை தான் உன்னை வாழ்விக்கிறது; உன்னைச் சுவாசிக்க வைக்கிறது. உன்னுள்ளிருந்து

ஊற்றெடுக்கக்கூடிய கருணையை உணர்ந்துகொண்டால் நீ எல்லாவற்றிற்குள்ளும் உறையும் இறைவனையும் உணர்ந்தவனாய், அன்பாய் இருப்பாய்.

**சீடன் : நான் கருணையை உணர்ந்தவனாகி, அது என்னிலிருந்து பரவும் போது நானும் உங்களைப் போல் ஆகிவிடுவேனா?**

**குரு:** ஆம்; என்னைப் போலாவதற்கு வேறு வழி ஏதும் இல்லை. குருவானவன் எளிமையாகவும் அளவற்ற அன்புடையவனாகவும், சகிப்புத்தன்மையுள்ளவனாகவும் எதையும் மன்னிக்கும் குணம் உடையவனாகவும் இருக்கிறான் அல்லவா? கருணை என்பது மிக முக்கியமானது. சீடன் தன் குருவினிடமிருந்து எந்நேரமும் எந்தத் தடையுமின்றிக் கருணையைப் பெற்றவண்ணம் இருக்கிறான். அப்படி ஊற்றாகப் பெருகும் கருணையை அவன் உணர்ந்து, அதைப் பிறரும் உணருமாறு வாழ்கிறான். காந்தத்தைப் பற்றியிருக்கும் இரும்பும் காந்த சக்தியைப் பெறுவதைப் போல், குருவின் அணுக்கத்தைப் பெற்ற சீடனும் குருவைப் போலவே கருணையின் வெளிப்பாடாக இயங்குகிறான். சகல ஜீவராசிகளும் இப்படிச் சங்கிலித் தொடராய்க் கருணையென்னும் காந்த சக்தியைக் குருவின் மூலம் பெற்று இயங்கத் தொடங்கினால், அதுதான் கடவுளின் சாம்ராஜ்யம்.

**சீடன் : நான் கருணையை உணர்ந்தபின் அது என்னிலிருந்து பரவ நான் என்ன செய்ய வேண்டும்?**

**குரு :** உன் மனத்தை முதலில் எளிமையாக வைத்துக்கொள்ள வேண்டும். எதையும் இலகுவாக எடுத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உன்னுடைய எண்ணங்கள் ரம்யமாக இருக்கும். இனிமையற்ற எண்ணங்கள் தாமாகவே வாடி உதிரும். பிரச்சினைகளற்ற மனம் இருந்தால் போதும். உனக்குள் ஊற்றெடுக்கும் கருணை உன்னைச் சுற்றியிருப்போருக்கும் பரவ, இதைத் தவிர வேறெதுவும் தேவையில்லை. உனது வயிறு சதா இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், உனக்கு அதைப்பற்றிய பிரக்ஞை இருப்பதில்லை யல்லவா? அதனால் அந்த இயக்கம் எந்த வகையிலேனும் பாதிக்கப்படுகிறதா? உனது மனதும் அது போலத்தான். முதலில் ஒரு குறிப்பிட்ட நிலையை அடைவதற்குத்தான் பயிற்சி தேவை. அடைந்த பிறகு அந்த நிலையைத் தக்க வைத்துக்கொள்ள எந்த முயற்சியும் தேவையில்லை. அதைப்பற்றி நீ உனக்கு ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. நீ உன்னில் ஈடுபாடு கொள்ளாதே. சக மனிதர்களுடன், உன் மனத்துடன், உனக்கேற்படும் நன்மை தீமைகளுடன் உன்னை ஈடுபடுத்திக் கொண்டால் பிரச்சினைதான் உண்டாகும். அங்ஙனம் ஈடுபடுத்திக்கொள்ளாமல் இருந்தால் நீ பிரச்சினை யின்றிச் சுலபமாக வாழமுடியும். இந்தப் பழக்கம் ஒரு நொடியில் வரக்கூடியதல்ல. ஏனென்றால் இதுவரை எல்லாவற்றிலும் உன்னைச் சம்பந்தப்படுத்திக்கொண்டு மிகுந்த ஈடுபாட்டுடன் வாழ்ந்தே பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டாய். இப்போது நீ உன் ஆத்மாவில், லயமாக விரும்புகிறாய். ஆதலால் நீ பிறவற்றில் உன்னைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளாமல் இருக்க எண்ணுவதில் எந்த விதமான தவறும் இல்லை. நீ இந்தப் பாதையில் தொடர்ந்து செல்வாயானால் எல்லாம் சுலபமாகும்.




## அருட்பெருஞ்ஜோதி அகவல்
## உரை விளக்கம் வரி (3 4)

**அருட்சிவ நெறிசார் அருட்பெருநிலை வாழ்**
**அருட்சிவ பதியாம் அருட்பெருஞ்ஜோதி**

| | | |
|---|---|---|
| சிவன் | சிவம் | அருட்சிவம் |
| ↓ | ↓ | ↓ |
| ஒளி | பேரொளி | அருட்பேரொளி |
| ↓ | ↓ | ↓ |
| கருணை | பெருங்கருணை | தனிப்பெருங்கருணை |
| ↓ | ↓ | ↓ |
| ரூபம் | சொரூபம் | சுபாவம் |

என்றும் நிலைத்தும், என்றும் மாறாமலும், என்றும் உள்ளவராயும், பரிசுத்தமான ஒழுக்கத்தை வகுத்து, அருளுடைய பெரிய நிலையில் வாழ்ந்துக் கொண்டு இப்பெருவாழ்வில் அனைத்து ஆன்மாக்களும் வாழ அழைக்கிறார். நாம் வருவிக்க உற்றதன் குறிக்கோள் இதுவே என்பதை மறந்து விடக்கூடாது. அருட் சிவ நெறி என்பது சுத்த சன்மார்க்க நெறியே. சுத்த சன்மார்க்க ஒழுக்கங்களை கடைபிடித்து அருட்சிவ நிலை அடைவோம்.....



# பாவ பதிவுகளை அடியோடு ஒழித்தல் வேதாத்திரி மகரிஷி அவர்கள் விளக்குகிறார்

பிறர் மனதுக்கு துன்பம் இல்லாமல் வாழ்வது, பிற உயிர்களை கொள்ளாமல் இருப்பது, பிறருடைய பொருளை பறிக்காமல் இருப்பது, பிறருடைய வாழ்க்கை சுதந்திரத்தை பறிக்காமல் இருப்பது இந்த நான்கு வகையான நல்ல செயல்களை பின்பற்றி வரும்பொழுது தூய்மையான புதிய பதிவுகள் உண்டாகிறது. அந்த பழைய பதிவுகள் அத்தனையும் விலகி தெய்வமாகவே மாறிவிடுகின்றான். எந்த ஒரு பொருளை எந்த ஒரு செயலை அடிக்கடி ஒருவர் நினைத்தால் அதே தன்மையாக மனிதன் மாறி விடுவான். அந்த தத்துவத்தின் படி மனிதன் இறைவனையே எண்ணி எண்ணி தூய்மை அடைந்து விடுகிறான். ஆதலால் எல்லா பாவங்களும் அடியோடு ஒழிந்து விடும்.

# இறைவன் நமக்கு பாவம் செய்யும் வாய்ப்பையும் கொடுப்பது ஏன் ?



**நா**ம் பாவம் செய்யாமல் இறைவன் தடுத்து இருக்க வேண்டும். அல்லது பாவம் செய்வதற்கே வாய்ப்பே இல்லாமல் செய்திருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால் நாம் புண்ணியம் மட்டுமே செய்திருப்போம் இல்லையா? அசைவ உணவை சாப்பிட்டால் அது செரிமானம் ஆகாதது போல் இறைவன் செய்திருக்க வேண்டும். அல்லது அதனை சாப்பிடவே முடியாது போல் இறைவன் உருவாக்கி இருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால் அதனை யாரும் சாப்பிட மாட்டார்கள் இல்லையா? இறைவன் ஏன் அப்படி செய்யவில்லை. கேள்விகள் பலவிதமாக இருந்தாலும் அது ஒரு இடத்தில் நிற்கின்றது. இறைவன் நமக்கு பாவம் செய்யும் வாய்ப்பையும் கொடுப்பது ஏன்?

இந்த கேள்விக்கான விளக்கத்தை புரிந்து கொள்ள நமக்கு பிறப்பிற்கான காரணம் தெரிந்திருக்க வேண்டும். நாம் ஏன் பிறப்பிற்கு வந்தோம்? பேரறிவைப் பெறுவதற்காக. ஏன் பேரறிவு பெற வேண்டும்? பேரறிவு பெற்றால் தான் ஆன்மாவைப் பற்றிய ஆணவம் நீங்கும். ஏன் ஆணவம் நீங்க வேண்டும்? ஆணவம் நீங்கினால் தான் உயிர்களுக்கு துன்பமெல்லாம் நீங்கி பேரின்பம் உண்டாகும்.

ஆன்மாக்களாகிய நாமெல்லாம் ஆணவமலத்தால் பெரும் துன்பத்தில் இருக்கின்றோம். தன்னைப் போல் ஒரு உயிர்ப்பொருள் இப்படி ஆணவத்தால் துன்பப்படுகின்றதே என்று தனிப்பெருங்கருணை காட்டுகின்றார் இறைவன். இந்த ஆன்மாக்கள் எல்லாம் துன்பமே இல்லாமல் என்றும் தன்னைப் போல் பேரின்பத்தில் இருக்க வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றான். அப்படி துன்பம் நீங்கி பேரின்பம் உண்டாக ஆணவம் நீங்க பேரறிவைப் பெற வேண்டும். பேரறிவைப் பெற அறிவு வளர்க்கப்பட வேண்டும். அப்படி அறிவை வளர்க்கவே பிறப்பு இறைவனால் கொடுக்கப்படுகிறது.

இறைவன் கொடுக்க விரும்பும் இன்பம், பேரின்பம் மட்டுமே. மற்றபடி உலகில் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பமெல்லாம் நமது கர்மத்தால் உண்டானது. அதனால் தான் தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பர். நாம் பிறந்ததே பேரின்ப பெறுவாழ்வு பெறவே வள்ளல் பெருமான் ஜீவகாருண்ய ஒழுக்கத்தில்

குறிப்பிடுகின்றார். உலகத்தில் மனிதப்பி றப்பை பெற்று கொண்டவர்கள் பிறப்பி னால் அடையத்தக்க ஆன்ம லாபத்தை காலமுள்ள போதே அறிந்து அடைய வேண்டும். அந்த ஆன்ம லாபம் எது என்றால் கடவுளின் இயற்கை இன் பத்தைப் பெற்று தடைபடாமல் வாழ் கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வே என்பார். கடவுளின் இயற்கை இன்பம் என்பது பேரின்பம்.

இறைவன் நினைத்தால் ஒரு நொடியில் நம் துன்பத்தை நீக்க முடியாதா என்றால் முடியும். ஆனால் அதனால் பயன் இல்லை ஆன்மாவானது போதிய அறி வின்மையால் மீண்டும் மீண்டும் துன்பத் தில் அகப்பட்டுக் கொள்ளும். இது ஒரு மாணவனுக்காக ஆசிரியரே தேர்வு எழு துவது போன்று. இதனால் மாணவனுக்கு அறிவு தெளிவு உண்டாகாது, இறைவன் பெருங்கருணையினால் ஆன்மாக்களை தன்னைப்போல் பேரின்பம் உடைய தாக உருவாக்க விரும்புகின்றார். அப்படி உருவாக்கிவிட்டால் பிறகு அது துன் பத்தில் மாட்டிக்கொள்ளாது. பேரின்ப பெருவாழ்விலேயே இருக்கும். அதற்கு யாருடைய உதவியும் தேவைப்படாது. ஒரு தந்தை ஒரு குழந்தைக்கு அறிவை வளர்க்க உதவ வேண்டுமே தவிர, தானே அந்த குழந்தைக்கு எப்போதும் அறிவாக இருந்து செயல்பட்டால் கடைசி வரை அந்த குழந்தைக்கு அறிவோ, அனுப வமோ உண்டாகாது.

ஒரு போர் வீரன் இருக்கின்றார் அவர் தன்னுடைய பிள்ளைகளுக்கு போர் பயிற்சியை கற்றுத்தராமல் தானே அந்த பிள்ளைகளுக்காக போர் புரிந்தால் அந்த பிள்ளைகளுக்கு அந்த வீரம் உண்டாகாது. தன்னை போல் தன் பிள்ளைகள் வீரனாக வேண்டுமென்றால், அந்த பிள்ளைகளுக்கு பயிற்சி அளித்து, போர் புரிய வைக்க வேண்டும். அப்பொழுதுதான் அது அந்த பிள்ளைகளின் வீரமாக இருக்கும். அது போல் இறைவன் ஆன்மாக்களை தன்னை போல் பேரின்பம் உடையதாக உருவாக்க விரும்புகின்றான். அதனால் தனக்குரிய பேரறிவை ஆன்மாக்களுக்கு கொடுக்க பயிற்சி வகுக்கின்றான். அந்த பயிற்சியே பிறப்பு. இங்கு ஆணவத்திற்கும், ஆன்மா விற்குமான போர் நடக்கின்றது. அதில் வெற்றி பெறவே ஆன்மாக்களுக்கு இந்த வாழ்க்கை என்னும் பயிற்சி வகுக்கப்படு கின்றது. ஆணவத்தை நீக்கும் அளவிற்கு ஆன்மா தேறிவிட்டால் ஆணவத்தால் ஆன்மாவை பற்ற முடியாது.

### இப்பொழுது கேள்விக்கு வருவோம்

இறைவன் ஏன் நம்மை பாவம் செய்ய அனுமதிக்கின்றார் என்றால் நாம் புண்ணி யம் மட்டும் தான் செய்ய முடியும், பாவமே செய்ய முடியாது என்று இறைவன் வகுத்தி ருந்தால் அது நம்முடைய அறிவாக இருக் காது. அது இறைவனுடைய அறிவாக மட்டும் தான் இருக்கும். அதனால் ஆன் மாவிற்கு அறிவு வளர்ச்சி உண்டாகாது. அதனால் ஆன்மாக்கள் இறைவனைப் போல் பேரறிவைப் பெற முடியாது. நல்லது கெட்டது இரண்டையும் செய்யும் சுதந்திரத்தை கொடுத்து, அதில் நல்லதை தேர்ந்தெடுக்கும் அளவிற்கு சொல்லிக் கொடுத்தே இறைவன் நம் அறிவை வளர்க் கின்றார். இறைவன் இந்திர சாட்சியாகவும், மனசாட்சியாகவும், ஜீவ சாட்சியாகவும், ஆன்ம சாட்சியாகவும் இருந்து, நமக்கு நல்லது கெட்டதை சொல்லி நல்லதை செய்ய வலியுறுத்துகின்றார். நாம் தான் நம்முள் இயற்கையிலேயே உள்ள ஆணவத் தினால் சொல் கேளாமல் தவறு செய்து துன்பத்தில் வீழ்ந்து விடுகின்றோம். இங்கு நல்லதையும் செய்ய முடியும், கெட்டதை யும் செய்ய முடியும். இறைவன் சொல் கேட்டு அறிவு வளர்த்துக் கொண்ட அறி வுடையவர்கள் நல்லதை மேலும் மேலும் செய்து மேலும் அறிவை வளர்த்துக் கொள் கிறார்கள். அறிவற்றவர்கள் கெட்டதை செய்து அஞ்ஞானத்திலும் ஆணவத்திலும் வீழ்கிறார்கள்.

## அறிவு என்றால் என்ன?

ஒருவர் எந்த அளவிற்கு கருணை

உடையவராக இருக்கின்றாரோ அந்த அளவிற்கு அறிவு உடையவராக இருக்கின்றார். கருணையின் அளவே அறிவு. உலகில் பல கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து இருந்தாலும், பல புத்தகங்கள் எழுதி இருந்தாலும், அந்த அறிவு ஆன்ம அறிவு இல்லை. அதை புத்தி என்று கூறுவார்கள். அத்தனை கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து பல புத்தகங்களை எழுதியவர் இறந்து மீண்டும் பிறந்தால் அந்த புத்தகங்களை அவரே கடினப்பட்டு தான் முதலில் இருந்து படிப்பார். ஆனால் ஒருவர் தன்னை கருணை உடையவராக வளர்த்துக் கொண்ட அளவு, அடுத்த பிறப்பில் பிறக்கும் பொழுது கருணை உடையவராகவும், உத்தமராகவும் இருப்பார்கள். அந்த கருணையின் அளவே அவருடைய குணமாக இருக்கும். அந்த கருணையின் அளவே அவருடைய ஞானமாக இருக்கும். எனவே கருணையாகிய ஞானத்தை வளர்த்தே ஆணவத்தை நீக்க வேண்டும். அதனால் தான் வள்ளல் பெருமான் ஞான வழி என்பதும், சன்மார்க்கம் என்பதும், ஜீவகாருண்ய ஒழுக்கமே என்பார். மேலும் சிலர் கருணையற்றவர்களாக இருப்பதற்கு காரணம் அவர்களுக்கு ஆன்ம அறிவு பிரகாசம் இல்லாமல், அஞ்ஞானத்தால் மழுங்கி உள்ளது என்பார். எனவே அறிவு என்பது கருணையின் அளவு.

**ஆணவத்தை முற்றிலும் நீக்க முடியாது என்றும், அது இயற்கை பொருள் அதனால் அழியாது என்றும், கூறுகின்றார்களே அது சரியா என்றால் இல்லை.**

கடவுள் ஆன்மா ஆணவம் ஆகிய இயற்கை பொருள் மூன்றில் கடவுள் தனித்த உயிர்ப்பொருள் ஆன்மாக்களும் தனித்த உயிர் பொருள். ஆனால் ஆணவம் ஆன்மாவை சார்ந்த ஒரு ஜடப்பொருள். இயற்கை பொருளாக இருந்தாலும், எது ஒன்று மற்றொன்றை சார்ந்து இருக்கின்றதோ, அது அழிந்துவிடும். ஆணவம் தனித்த ஒரு பொருளாக இல்லாமல், செம்பின் களிம்பு போல், ஆன்மாவினுள் ஆணவம் இருக்கின்றது. செம்பில் உள்ள களிம்பை நீக்கி தங்கமாக்குவது போல், ஆன்மாவில் உள்ள ஆணவத்தை நீக்கினால் ஆன்மா பரமான்மாவாகி விடும். வீட்டினுள் உள்ள பல அறைகளில் ஒரு அறையில் ஒளி பிரகாசம் உண்டாக உண்டாக அந்த அறையில் உள்ள இருள் முற்றிலும் நீங்குவது போல், ஆன்மாவின் இடத்தில் ஆன்ம பிரகாசம் உண்டாக உண்டாக ஆன்மாவில் உள்ள ஆணவமான இருள் முற்றிலும் நீங்கும். ஆன்ம பிரகாசமானது ஆன்மா பேரறிவைப் பெற்ற நிலை. அதனால் தான் வள்ளல் பெருமான் சிவானுபவம் மேலிட ஆணவம் கெடும் என்பார்.

சிவானுபவமாகிய உண்மை அறிவு இன்பத்தைப் பெற பெற ஆணவம் அழிந்து கொண்டே வரும். பேரறிவையும் பேரின்பத்தையும் பெற்று உண்மையே வடிவாக நிற்கும் பொழுது ஆணவம் முற்றிலும் மறையும்.

**ஆன்மா என்றுமே இறைவனோடு கலக்க முடியாது. அது இறைவனுடைய திருவடியை மட்டுமே அடைய முடியும் என்கிறார்களே அது சரியா?**

அது தவறு அப்படி சொல்வதே பாவம். ஒரு ஆன்மா தன்னோடு இரண்டறக் கலக்க முடியாது. தன்னுடைய திருவடியைத் தான் அடைய முடியும் என்று இறைவன் வகுத்திருந்தால் இறைவனுக்கே நான் பெரியவன், நீ சிறியவன் என்ற பேதமை உண்டு என்றாகிவிடும். எனவே அப்படி கூறுவதே பாவம். எல்லா ஆன்மாக்களும் தன்னைப்போல் பேரறிவைப் பெற்று துன்பங்கள் எல்லாம் முற்றிலும் நீங்கி தன்னைப்போல் பேரின்ப பெரு வாழ்வு வாழ வேண்டும் என்பதே இறைவனுடைய தனிப்பெருங்கருணை.

அப்படி ஒரு ஆன்மா பேரறிவு பெரும் பொழுது பிரகாசம் பிரகாசத்தோடு கலந்து விடுவது போல், அறிவு அறிவோடு கலந்து அங்கு இரண்டுமற்ற தன்மையில் இருக்கும். நமக்கு பேதமை உள்ளது போல் இறைவனுக்கு பேதமை இல்லை...

# மனத்தால் நினைத்ததை எல்லாம் பெற வள்ளலார் பயிற்சி

## நாம் நினைத்தது நடக்கவில்லை என்றால் இதுதான் காரணம்



ஒரு முரடன் சன்மார்க்க சாதுவிடம் வந்து நீங்கள் கோபப்படக்கூடாது என்று சொன்னீர்கள். நானும் கோபப்படக்கூடாது என்று இருந்தேன். ஆனால் ஒருவன் என்னை கோபப்படுத்திக் கொண்டே இருக்கின்றான். எனக்கு இப்பொழுது கோபம் தலைக்கேறி உள்ளது. இப்பொழுது எனக்குள்ள கோபத்திற்கு ஒரே அடியில் அவன் எலும்பை உடைத்து விடுவேன் என்றான். ஒரே அடியில் எலும்பை உடைத்து விடுவாயா என்று ஆச்சரியமாய் கேட்டார் சாது. ஆம் நான் அவ்வளவு வலிமையுடையவன். நீங்கள் சொன்னதற்காக இத்தனை நாள் கோபப்படாமல் இருந்தேன். ஒருவர் ஒரு கட்டையால் அடித்து உடைப்பதை எல்லாம் நான் வெறும் என் கரத்தால் அடித்து உடைப்பேன் என்றான் அந்த முரடன்.

நிச்சயமாகவா ! என்றார் சாது. ஆமாம் என்றான் முரடன். அப்படி என்றால் நான் கட்டையால் அடித்து உடைப்பதை எல்லாம் நீ கையால் அடித்து உடைக்கின்றாயா என்று கேட்டார் சாது. நிச்சயமாக செய்கிறேன் என்றான் முரடன். அங்கிருந்த ஒரு கட்டையை எடுத்து ஒரு செங்கல்லை உடைத்தார் சாது. அவ்வளவுதானே என்று கூறி கையால் ஒரு செங்கல்லை மிக எளிதாக உடைத்தான் அந்த முரடன். பிறகு சாது ஒரு கண்ணாடி பாட்டிலை எடுத்து கட்டையால் உடைத்தார். அந்த முரடன் பாட்டிலைக் கண்டவுடன் திகைத்து நின்றான். ஏன் தயக்கம் நீ உடைத்த செங்கல்லை விட, இது உறுதியற்றது. அடித்து உடை என்றார் சாது. இதனை உடைப்பது எளிது தான் ஆனால் உடைத்தப் பிறகு அதன் பின் விளைவுகள் அதிகம். அது எனது கையை குத்தி கிழித்து விடும் என்றான் முரடன். சாது சொன்னார், கண்ணாடி பாட்டில் போன்றது தான் நம் மனம். கோபத்தால் நாமே நம் மனத்தை அடித்து உடைக்கின்றோம். எனவே அது நம்மை குத்தி கிழிக்கின்றது. கோபத்தால் உடைபட்ட மனம் ஒழுக்கத்தையும், ஆரோக்கியத்தையும்,

ஆயுளையும் கிழித்து விடுகிறது.

நம்மை துன்புறுத்தியவனை, நாம் துன்புறுத்த வேண்டும் எனும் கோபம் உண்டாகும் போதே, நமது உடலும், உயிரும், மனமும், ஆரோக்கியமும் பாதிப்புக்குள்ளாகிறது. சில நிமிட கோபம் நமக்கு பல மணி நேர வேதனையையும், சோர்வையும் கொடுத்துவிடுகிறது. கோபத்தின் போது நம்மால் பிறருக்கு கொடுக்கப்படும் துன்பத்தை விட நமக்கு நாமே பெற்றுக்கொள்ளும் துன்பம் தான் அதிகம். நான் உன்னை கோவப் படக்கூடாது என்று சொன்னது உன்னிடம் இருந்து மற்றவர்களை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இல்லை, உன் கோபத்திடமிருந்து உன்னை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக. கோபனேன் கொடியன் என்று பாடுவார் வள்ளல் பெருமான். அந்த கொடியவன் நம்முள் இருந்தால் நம்மை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து விடுவான். எனவே அந்த கொடியவனை உனக்குள் அனுமதிக்காதே என்றார் அந்த சாது. தன் தவறை உணர்ந்து மனம் மாறினான் அந்த முரட்டு இளைஞன்.

கோபம் உண்டாக பல காரணங்கள் இருந்தாலும் அது இரண்டிற்குள் அடங்கிவிடும்.

ஒன்று விருப்பு மற்றொன்று வெறுப்பு. விரும்பிய ஒன்று நடக்காவிட்டாலும், வெறுக்கும் ஒன்று நடந்து விட்டாலும் கோபம் உண்டாகும். எனவே விருப்பத்தால் சாதனம் கெடும். வெறுப்பால் ஜீவ உபகாரம் கெடும் என்பார் வள்ளல் பெருமான். எனவே விருப்பு வெறுப்பற்று சத்துவ மாயமாய் நிற்க வேண்டும் என்பார். இந்த விருப்பு வெறுப்பால் உண்டாகும் கோபத்தை ஒன்றுக்குள் அடக்கி விடலாம். அது சகிப்பின்மை. விரும்பிய ஒன்று நடக்காவிட்டாலும். வெறுக்கும் ஒன்று நடந்து விட்டாலும் அதனை சகித்துக் கொள்பவன் தவத்தில் சிறந்தவன். சகித்துக் கொள்ள முடியாத



வன் கோபத்தால் தாழ்ந்தவன்.

கோபத்தை எங்கெல்லாம் வெளிப் படுத்தக் கூடாது என்றால் “செல்லா இடத்து சினம் தீதே” என்பார் வள்ளுவ பெருந்தகை. எங்கே நமது கோபம் செல்லாதோ அங்கே கோவப்பட்டால் நமக்கு தீமையே விளையும். நம்மை விட வலியவர்கள் இடத்தில் கோபத்தைக் காட்டக்கூடாது என்கிறார். அப்படி என்றால் நமது கோபம் செல்லும் இடத்தில் கோவப்படலாமா என்றால்

‘செல் இடத்தும் இல் அதனின் தீயப்பிற’ என்பார் வள்ளுவ பெருந்தகை. உங்கள் கோபம் ஒரு இடத்தில் செல்லும் என்றாலும் அங்கு கோபப்பட்டாலும், அதைவிட தீமை வேறு இல்லை என்கிறார். நமது அன்பானவர்கள் இடத்தில் நமது கோபம் செல்லுபடியாகும். ஆனாலும் அது நமக்கு மிகுந்த தீமையையே உண்டாக்கும். அதனால் தான் வள்ளுவ பெருந்தகை

**‘செல்லிடத்துக் காப்பான் சினங் காப்பான்**
**அல்இடத்துக் காக்கில்என் காவாக்கால் என்’** என்பார்

செல்லும் இடத்தில் கோபத்தை கட்டுப்படுத்தி விட்டால், மற்ற இடத்தில் தானாக கட்டுக்குள் நிற்கும். எனவே அங்கு கோபத்தை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஒரு கருங்கல்லை கையால் குத்தி உடைக்க வேண்டும் என்றால் முடியாது. அது நமது கோபம் செல்லா இடம். குத்தினால் கல் உடையது கை தான் உடையும். ஒரு

கண்ணாடி பாட்டிலை கையால் குத்தி உடைக்க முடியும் என்றால் முடியும். அது நமது கோபம் செல்லும் இடம். ஆனால் குத்தி உடைத்தால் அது நமது கையை கிழித்து விடும். அது போல் நம் கோபம் செல்லும் இடத்திலும், நமது கோபத்தை காட்டினாலும் நமக்கு பெருந்துன்பமே உண்டாகும்.

கோபப்படாமல் இருப்பதால் என்ன நன்மை உண்டாகும் என்றால்.

மனதளவில் கூட கோபம் கொல்லாத வனுக்கு அவன் மனத்தால் நினைத்ததை எல்லாம் பெறுவான் என்கிறார் வள்ளு வர் பெருந்தகை.

சினம் அழிந்தால் எல்லாம் சித்தியா கும் என்பார் இடைக்காட்டுச் சித்தர். நாம் நினைத்தது நடக்கவில்லை என்றால் நாம் சினத்தை அடக்கவில்லை என்றே பொருள்... பிறர் செய்யும் தீங்கை பொறுத் துக் கொண்டு கோபப்படாமல் இருப்பது என்பது ஒரு சாதாரண செயல் இல்லை. ஒருவன் கோபத்தை வென்றான் என்றால் அவன் துறந்தவர் போல் தூய்மை உடை யவன் என்கிறார் வள்ளுவ பெருந்தகை.

யாவும் துறந்தது போன்ற தூய்மையைப் பெற்றபின் நினைத்தது யாவும் நிறைவேறும் கோபத்தை துறந்தவர் யாவற்றையும் துறந்து தூய்மையை பெறுகிறார். அளவுகடந்த சினம் உடையவர் இறந்தவர் போன்றவர்.

அடியோடு சினத்தை வென்றவர் துறந்தவர் போன்று சிறந்தவர் என்கிறார். எனவே நம்மை துன்புறுத்தியவரின் மீது நாம் கோவப்படவில்லை என்றால் நெஞ் சை நிமிர்த்தி பெருமைபட்டுக் கொள்ள லாம். நான் இறந்தவர் போல் இல்லை துறந்தவர் போல் இருக்கிறேன் என்று.

சினமோடு காமமும் தீர்ந்தேன் எல்லாம் வல்ல சித்தும் பெற்றேன் என்பார் வள்ளல் பெருமான். சினமும், காமமும் தீர்ந்தால் எல்லாம் வல்ல சித்து கைகூடும். எனவே நாம் நினைத்தது எல்லாம் நடக்க வள்ளல் பெருமான் அருளிய பிறர் மீது கோபம் கொள்ளாதிருத்தல் எனும் ஒழுக்கத்தை கடைபிடித்து நலம் பெறுவோம்....

## ஓவியங்கள்:

**5 முதல் 15 வரை உள்ள மாணவ–மாணவிகளிடமிருந்து தனக்குப் பிடித்த சைவ பிராணிகள் என்ற தலைப்பில் ஓவியங்கள் வரவேற்க்கப்படுகின்றன.**

## இளைஞர் கட்டுரைகள்

சன்மார்க்க அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தங்களின் சன்மார்க்க கட்டுரைகள், மற்றும் கவிதைகள் அருள்ஜோதி மாத இதழ் புத்தகத்தில் புகைப் படத்துடன் பிரசுரிக்கப்படும்.

<u>குறிப்பு:</u>

**நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற தாங்களும், தங்களின் அனுபவத்தை நமது இல்லத்திற்கு வருகின்ற சேவதாரிகளிடம் தாங்கள் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற அனுபவத்தை பகிர்ந்து கொண்டு பதிவு செய்வதன் மூலமாகத் தங்களின் அனுபவமானது அருள்ஜோதி புத்தகத்தில் வெளியிடப்படும்.**

# இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் தோற்றுவாய்

இன்றைக்குச் சுமார் ஐம்பது ஆண்டுக்கு முன்னர் தமிழ் நாட்டில் வசித்து மறைந்த நம் இராமலிங்க சுவாமிகள், சாதிமத வேற்றுமைகளைப் பலவுரையால் மறுத்துச் சமரச ஞானத்தை அறிவுறுத்திக், கோயில்களெல்லாஞ் சாதிக் கோயில்களாக மாறியது கண்டு, எல்லாரும் போந்து வழி படுதற்கென இச் சமரசக் கோயிலை (வடலூர்சபை) அமைத்துச்சென்றார். இங்கேயாதல் சுவாமிகள் கொள்கை ஆட்சியி விருக்கிறதா? ஈங்கும் சாதிப்பேய் புகுந்து தன்னாட்சி செலுத்துகிறது. இந்தக் கொள்ளைக்கு இந்தக் கொலைக்கு என் செய்வது?

('எச்சபைப் பொதுவென இயம்பினர் அறிஞர்கள் அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ் சோதி' என்று சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்.) இச்சபை அந்நோக் குடன் சுவாமிகளால் நிறுவப் பட்டது. இஃது இப்பொழுது எல்லா நாட்டினர்க்கும், எல்லா மொழியினர்க்கும், எல்லாச் சமயத்தவர்க்கும், எல்லாச் சாதியார்க்கும் பொதுவாகப் பயன்படுகிறதா?

**'எச்சமயத் தவரும்வந் திறைஞ்சா நிற்பர்** என்று

தாயுமான சுவாமிகள் சிதம்பரத்தின் பொதுமை தெரித்துப் போந்தார். இப்பொழுது சிதம்பரத்தில் எல்லார்க்கும் இட முண்டா? தாயுமானார் காலத்தில் பொதுவுடைமையாகக் கருதப்பட்ட சிதம்பரம், இப்பொழுது சிலருடைமையாகவே கருதப்படுகிறது.

அக்கொடுமை கண்டே இராமலிங்க சுவாமிகள் இங்கு இச்சபைக் கோயிலை நிறுவினார். இதுவும் தன் பொதுமையை இழந்து நிற்கிறது. பெரியோர் கொள்கையை வீழ்த்தி அவர் தம் உருவத்துக்கு மட்டும் நம்மவர் விழாக் கொண்டாடுகின் றனர். இக்கொடுமையை யாண்டுச் சென்று முறையிடுவது? ஆண்டவனே! உன்னிடத்திலேயே முறையிடுகிறேன். வேறு களைகணில்லை. என் நாட்டார்க்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துவாயாக.

சமரசம் என்பது நாடு, மொழி, சமயவெறி, சாதி முதலியவற்றில் கட்டுப்படாது கடந்து நிற்பது. எல்லா நாட்டார், எல்லா மொழியினர், எல்லாச் சமயத்தார், எல் படுதற்கென இச் சமரசக் கோயிலை (வடலூர்சபை) அமைத் துச்சென்றார். இங்கேயாதல் சுவாமிகள் கொள்கை ஆட்சியி லிருக்கிறதா? ஈங்கும் சாதிப்பேய் புகுந்து தன்னாட்சி செலுத்துகிறது. இந்தக் கொள்ளைக்கு இந்தக் கொலைக்கு என் செய்வது?

('எச்சபைப் பொதுவென இயம்பினர் அறிஞர்கள் அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ் சோதி' என்று சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்.) இச்சபை அந்நோக் குடன் சுவாமிகளால் நிறுவப் பட்டது. இஃது இப்பொழுது எல்லா நாட்டினர்க்கும், எல்லா மொழியினர்க்கும், எல்லாச் சமயத்தவர்க்கும், எல்லாச் சாதியார்க்கும் பொதுவாகப் பயன்படுகிறதா ?

'எச்சமயத் தவரும்வந் திறைஞ்சா நிற்பர்' என்று தாயுமான சுவாமிகள் சிதம்பரத்தின் பொதுமை தெரித்துப் போந்தார். இப்பொழுது சிதம்பரத்தில் எல்லார்க்கும் இட முண்டா? தாயுமானார் காலத்தில் பொதுவுடைமையாகக் கருதப்பட்ட சிதம்பரம், இப்பொழுது சிலருடைமையாகவே கருதப்படுகிறது.

அக்கொடுமை கண்டே இராமலிங்க சுவாமிகள் இங்கு இச்சபைக் கோயிலை நிறுவினார். இதுவும் தன் பொதுமையை இழந்து நிற்கிறது.



# திருமணத்தகவல்

## பெயர் : K. கணேஷ் குமார்

பிறந்த தேதி: 10.10.1988, படிப்பு: **MBA.,M.Com**

தொழில்: Private Company, PMO Analyst மாதவருமானம்: 40,000,

முகவரி: கதவு எண்.22, பாலாஜி பிளாட், பாம்பன் சுவாமிகள் சாலை, சென்னை 600064.

தொலைபேசி : 9791186336

## பெயர் : P.S. விவேகானந்தன்

பிறந்த தேதி: 07.12.1984, படிப்பு: **B.Sc,**

த/பெ சாமிநாதன்–ராதா,

தொழில்: IT Company, மாதவருமானம்: 3 லட்சம்,

முகவரி: கதவு எண்.76A, படேல் ரோடு, பெரம்பூர், சென்னை 600011.

தொலைபேசி : 9176131914 / 9884882797

## பெயர் : பா.பிரபு

பிறந்த தேதி: 09.08.1992, படிப்பு: **B.Sc., (CS)**

த/பெ பாலசுப்பிரமணியன் (லேட்)–சிவகனவள்ளி,

தொழில்: தனியார் கம்பெனி மேனேஜர், மாதவருமானம்: 35,000,

தொலைபேசி : 9629013272, 9777546262

## பெயர் : V. சிவக்குமார்

பிறந்த தேதி: 05.12.1991, படிப்பு: **MBA.,M.Com** த/பெ விஸ்வநாதன்–மகாலட்சுமி,

தொழில்: சுயத்தோழில் MM TRADERS ஆண்டுவருமானம்: 6 லட்சம்,

முகவரி: கதவு எண்.331, இந்திரா தெரு, பெலியப்பாநகர், வாலாஜாபேட்டை– 632513. தொலைபேசி : 9790370754

சீகாழி.கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்த

# ஒழிவில் ஒடுக்கம்

**திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் உரையிலிருந்து வினா–விடையாகத் தொகுத்தவர். ஜோதி.வீ.கோட்டீஸ்வரன், காஞ்சிபுரம்.**

**அஞ்சுதொழி லாவதுவே அஞ்சவத்தை கிஞ்சலிலா**
**வஞ்சிடத்துங் கொள்ளிவட்ட மாகவே–பஞ்சவன்னம்**
**வைத்த படிகம்போல் மாறாதுஉனை மயக்கல்**
**சித்திரக்கூத் தாகத் தெளி.**

**பஞ்ச கிருத்தியத்தால் அவத்தைகள் எவ்வாறு நிகழ்கின்றன?**

முப்பத்தாறு கருவிகளோடும் ஆன்மா தேக போகங்களை அறிதலின் சாக்கிரத்தை சிருட்டியாயும்; இச்சாக்கிரத்தில் புசித்த வாசனை சொப்பனத்தும் அறிந்து நிற்றலான் இதனைத் திதியாயும்; இச்சொப்பனம் போல் சிறிது நிழலெனத் தோன்றி மறைததால் சுழுத்தியைச் சங்காரமாயும்; பிராண வாயு இயக்கமின்றி ஒன்றுந் தோற்றாது இருத்தலால் துரியத்தைத் திரோபவமாயும்; அதீதம் கருவிகள் ஏதுமின்றி ஆணவ இருளாய் இருந்ததாயினும் அதன் நிமித்தமாய் மாயையில் தநுவாதி கொடுத்தல், இருவினை ஒப்பு வருவித்தல், ஆசாரிய மூர்த்தமாய் வந்து உபதேசித்தல் முதலிய அநுக்கிரகம் பெறுதலின் இவ்வதீதத்தை அநுக்கிரகமாய்க் கூறினார்.

முத்தியில் அருள் வடிவமாதல் சிருஷ்டி; ஆனந்தப் பேறு திதி, இதில் அதீதப்படுதல் சங்காரம்; ஞாதுரு, ஞானம், ஞேயம் எனும் மூன்றுந் தோன்றாதிருத்தல் திரோபவம்; இவை நான்கும் எக்காலமும் விளங்கல் அநுக்கிரகம்; ஆகிய இம்முறையே அவத்தைகள் வருவனங் கொள்க.

**மாயா விகார மதுபானம் போன்றுமயக்(கு)**
**ஓயாத அதுஉன்னால் ஒழியுமோ–நீயதுவாய்ப்**
**போகாமல் ஆடும் பவுரியவன் பொய்க்காட்சி**
**ஆகாது போலே அறி.**

**அவத்தைகள் நீங்கி நிற்றற்கு உபாயங் கூறி விளக்குக?**

அவத்தை என்பது மாயா காரியமாகிய கருவிக் கூட்டங்களினது சேட்டை. அது மதுபானங் கொண்டவனது நற்குணத்தை மாறுப்படுத்தித் தனது லாகிரி மேலிட்டு அவனை மயக்குதல் போன்று, உனது ஞான குணத்தை மாறுபடுத்தித் தனது குணமேலிட்டு உன்னை ஒழிவற நின்று மயக்கும். அதனை உன்னால் ஒழிக்கக் கூடுமோ? அதனை ஒழித்ததற்கு உபாயம் எதுவெனில்,

ஆடப்பட்ட ஓர் பார்ப்பனக் கூத்தன் தோட்டி வேடம் போட்டான் ஆயினும், அப்பொய் வேடக்காட்சி, தான் ஆகாது தன்னை வேறு கண்டு நின்றாற்போல, அவத்தையுள் இருத்தி எனினும் நீ அதன் மயமாய்ப் போகாது உன்னை வேறு பிரித்து அறிது எனின், அஃது உன்னை மயக்காது என்று அறிதி.

# வள்ளலாரின் புத்தகங்கள்

| | |
|---|---|
| 1.HOW SOUL BECOMES LIGHT | - ரூ.120 |
| 2.சத்திய ஞானசபைத்தத்துவ விளக்கம் | - ரூ.80 |
| 3. THE JOURNEY | - ரூ.50 |
| 4.திருவருட்பிரகாச வள்ளலார் வாழ்வில் நடந்த அற்புதங்கள் | - ரூ.20 |
| 5. வள்ளலார் வரலாறு (வினா-விடை) | - ரூ.30 |
| 6. திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய உபதேசங்கள் | - ரூ.10 |
| 7. திவ்ய ஒளி | - ரூ.50 |
| 8. அருட்குறள் | - ரூ.50 |
| 9. ஐந்தாம் திருமுறை | - ரூ.200 |
| 10. ஆறாம் திருமுறை | - ரூ.150 |
| 11. சாகாநிலை சத்திய வாழ்வு | - ரூ.50 |
| 12. சுத்த சன்மார்க்கம் வினா-விடை | - ரூ.30 |
| 13. நாளந்தாதி | - ரூ.40 |
| 14. அகவல் பாராயணத்திரட்டு (சிறியது) | - ரூ.15 |
| 15. அகவல் பாராயணத்திரட்டு (பெரியது) | - ரூ.30 |
| 16. உரைநடைப்பகுதி | - ரூ.200 |
| 17. அருட்பெருஞ்ஜோதி அகவல்விளக்கவுரை | - ரூ.225 |
| 18.வள்ளலார் பேனா | - ரூ.35 |
| 19.மகாமந்திரபெட்டி | - ரூ.600 |

# மூலிகை மருந்துகள்


| | |
|---|---|
| 1. கூட்டுசூரணம் (50கி) | - ரூ.60 |
| 2.கரிசாலை (50கி) | - ரூ.60 |
| 3.திரிபலா (50 கி) | - ரூ.60 |
| 4. முடவட்டான் கால்சூப் (50 கி) | - ரூ.100 |
| 5.மூச்சுடர் கரிசாலைத்தைலம் 200 (எம்.எல்.) | - ரூ.300 |
| 6. அகத்தியர் கருவப்பட்டை பற்பொடி (80 கி) | - ரூ.45 |
| 7.கரிசாலைக் கண் மருந்து | - ரூ.70 |
| 8.மூலிகைத்தைலம் | - ரூ.40 |
| 9.மூலிகை மிட்டாய் | - ரூ.10 |
| 10.சுக்குபொடி (50 கி) | - ரூ.55 |

# அருள்ஜோதி TV

அருள்ஜோதி
Aruljothi TV APP

**TCCL கேபிள் TV Channel No : 125**

## நிகழ்ச்சிகளின்
## சன்மார்க்கிகளின் கருத்துக்கள்...













**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை 'ARULJOTHI YOUTUBE CHANNEL' மூலம் காணலாம்.**


**ARULJOTHI MEDIA**

No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT: 7305263516 044–35519288**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com


**BANK DETAILS**

ARULJOTHI SANMARKKA TRUST
INDIAN BANK
A/C.No.:6206014778
IFSC CODE: IDIB000P034
BRANCH : PERAMBUR

Aruljothi TV
+91 73052 63516
8883360800@okbizaxis


**Published by: S. Dhanalakshmi ,**

Published from New No.:33/Old No:17, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thayathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012